<u>சமூக ஊடகங்களால் மாணவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள்.</u>

இன்றைய அறிவியல் உலகில் சமூக ஊடகங்கள் என்பது இன்றியமையாத ஒன்றாக மாறிவிட்டது.

இது மக்களுக்கு ஏற்புடைய நன்மைகளை அளித்தாலும் மாணவர்கள் அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்துவதால் பாதிப்புகளையே கொண்டு வருகின்றது என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை.

சமூக ஊடகங்களால் மாணவர்களுக்கு இளவயதிலேயே கண்பார்வை பாதிக்கப்படுகின்றது என்பதை யாராலும் மறுக்க முடியாது.

இவ்வூடகங்கள் அனைத்தும் திறன்பேசியிலும் கணினியிலும் அடங்கியிருப்பதால் அவர்கள் அதிக நேரம் அதைப் பார்க்கின்றனர். இதனால்தான், அவர்களின் கண்பார்வைப் பாதிப்படைகின்றது.

சமூக ஊடகங்களால் மாணவர்களுக்கு உடல் ஆரோக்கியமும் பாதிப்படைகின்றது. இந்த சமூக ஊடகங்கள் இல்லாதக் காலக்கட்டத்தில் மாணவர்கள் தங்கள் ஓய்வு நேரங்களில் திடலில் நண்பர்களுடன் விளையாடுவதைக் கண்கூடாகப் பார்த்திருக்கின்றோம். ஆனால், இக்காலக்கட்டத்தில் மாணவர்கள் வீட்டிலேயே அடைக்கோழிப் போல ஒரே இடத்தில் அமர்ந்திருக்கின்றனர்.

சமூக ஊடகங்களால் மாணவர்கள் எளிதில் தீய நட்புக்கு ஆளாகின்றனர்.

இதனால், மாணவர்கள் பெரியோர்களை மதிப்பதில்லை. மேலும், இவைதான் தங்கள் உலகம் என்று மூழ்கிக் கிடக்கின்றனர். மாணவர்கள் சிறுவயதிலேயே பல தீய பழக்கவழக்கங்களைக் கற்றுக் கொண்டு நாட்டிற்கும் வீட்டிற்கும் இன்னல்களை அளிக்கினறனர்.

சமூக ஊடகங்களால் மாணவர்கள் பெரும் அளவில் பதிப்பு அடைவது கல்வியில்தான். சமூக ஊடகங்களால் மாணவர்கள் தூக்கமின்மைக்கு ஆளாகின்றனர். அதனால், பள்ளியில் அவர்களின் கவனம் சிதறுகின்றது. ஆகவே, கல்வியில் பின்தங்குகிறார்கள்.

LIVEWORKSHEETS

சமூக ஊடகங்களினால் மாணவர்கள் கல்வியில் பின்தங்குகின்றனர் என்பதை அனைவரும் உணர வேண்டும். ஆகவே, மாணவர்களின் இந்நிலைக்கு முக்கியக் காரணம் பெற்றோர்களின் பொறுப்பற்றச் செயல்தான் என்று சொன்னால் அது மிகையாகாது.

மேலும், ஆசிரியர் கொடுக்கும் பாடங்களையும் செய்வதில்லை. மீள்பார்வையையும் செய்வதில்லை.

இது அவர்களின் ஆரோக்கியத்தைப் பெருதும் பாதிக்கின்றது என்பதை ஏனோ பெற்றோர்கள் புரிந்து கொள்ள மறுக்கிறார்கள்.

சமூக ஊடகங்கள் நமக்கு தேவையான அளவிற்கு மட்டுமே பயன்படுத்தி பயனடைவோம் நண்பர்களே. சமூக ஊடகங்களால் மாணவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள்.

இந்த அவசர உலகில் பணம் சம்பாதிக்கச் செல்லும் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைத் தொடர்புக் கொள்ளத் திறன்பேசியை வாங்கிக் கொடுக்கின்றனர்.

மக்களிடையே முக்கியச் சமூக ஊடகங்களாக திகழ்வது வலையொளி, முகநூல், புலனம், தொலைவரி, அளாவி போன்றவையாகும்.

முகநூல்,புலனம் போன்ற எளிதில் தொடர்புக்கொள்ளக் கூடிய ஊடகங்களினால் மாணவர்கள் கவர்ந்திலுக்கப்பட்டு அடிமையாகின்றனர்.

LIVEWORKSHEETS

LIVEWORKSHEETS